# கதம்பம்

இரிச்மண்டு தமிழ்ச் சங்கம்



## ஒரு இந்தியனின் பார்வையில் அமெரிக்கா

வாஷிங்டன் டல்லஸ் விமான நிலையத்தில் வந்து இறங்கியதற்குப் பின்னால், விமான நிலையத்தில் உள்ள நடைமுறைகளை எல்லாம் முடித்ததற்குப் பின்னால், உடைமைகளையும் எடுத்துக்கொண்டு ...

...

## 2025-2026 காலத்தின் நிர்வாகக் குழு

தாய் தமிழுக்கும், இரிச்மண்டு தமிழர்களுக்கும் தொண்டாற்ற முன்வந்திருக்கும் புதிய நிர்வாகக் குழு நண்பர்களை இரிச்மண்டு தமிழ்ச் சங்கம் வாழ்த்தி வரவேற்கிறது.

....

## முதலுதவி, CPR மற்றும் AED பயிற்சி

RTS மற்றும் CSRE இணைந்து RTS உறுப்பினர்களுக்கென சிறப்பாக முதலுதவி, CPR மற்றும் AED பயிற்சி வழங்கப்பட்டது.

....

## இந்த இதழில்...


- உறுப்பினர் சேர்க்கை புதுப்பித்தல்
- தலைவர் உரை
- செயலாளர் உரை
- 2023-2024 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் மாற்றங்கள்
- அருமையோ அருமை!
- 2025-2026 காலத்தின் நிர்வாகக் குழு
- மலர்
- முதலுதவி, CPR மற்றும் AED பயிற்சி
- 2024 கண்ட சாதனை நிகழ்வுகள்
- தமிழ்ப்பள்ளி
- ஒரு இந்தியனின் பார்வையில் அமெரிக்கா
- குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான கலை நிகழ்ச்சி
- நன்கொடை
- நன்றி உரை


**(பக்கத்திற்குச் செல்ல தலைப்பைக் கிளிக் செய்யவும்)**

# உறுப்பினர் சேர்க்கை புதுப்பித்தல்




உங்கள் RTS உறுப்பினர் சேர்க்கையை புதுப்பித்து, புத்தாண்டை வரவேறுங்கள்.

கீழே உள்ள இணைப்பை பயன்படுத்தி உங்கள் உறுப்பினர் சேர்க்கையை புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

https://www.zeffy.com/ticketing/richmond-tamil-sangam-membership--2025-2

# தலைவர் உரை



அனைவருக்கும் வணக்கம் !

நமது சங்கத்திற்கு 2023-2024 ஆண்டுகளில் பணிபுரிய எங்களுக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி.

இந்த ஈராண்டுகள் தனித்துவமானவை. கோவிட் தொற்று கட்டுப்படுத்தப்பட்டு, நாமெல்லாம் சற்று வெளி வர தொடங்கிய காலம். இன்னொருபுறம், இது நம் ஒற்றுமைக்குப் பாலமாக இருக்கும் நமது சங்கம் வெள்ளி விழா கண்ட காலம்.

உங்கள் நல்லாதரவோடும், நிதியுதவியாளர்களின் தாராள உதவிகளோடும், தன்னார்வலர்களின் அர்ப்பணிப்போடும், உறுப்பினர் எண்ணிக்கை ~425 ஆக வளர்ச்சியடைந்துள்ளது. ஏறத்தாழ மாதத்திற்கு ஒரு நிகழ்ச்சி வழங்கப்பட்டது. பின்வரும் புது நிகழ்ச்சிகள் அமோக வரவேற்புடன் அறிமுகப் படுத்தப்பட்டன.

1. ஆடவர் கேளிக்கை இரவு
2. நங்கை - தொழில் முனைய விரும்பும் தமிழ்ப் பெண்களுக்கான மேடை
3. CPR/AED/First Aid பயிற்சி
4. ஆடவர் கிரிக்கெட் போட்டிகள்
5. கல்வித் திருநாள்
6. உள்ளரங்க போட்டிகளின் பகுதியாக, தாயம் விளையாட்டு

வெள்ளி விழா நிகழ்ச்சி பெரிய அளவில், சூப்பர் சிங்கர் இன்னிசை நிகழ்ச்சியோடும், திரு. நெப்போலியன் அவர்கள் மற்றும் உள்ளூர் அரசு பிரதிநிதிகளின் தலைமையில், சிறப்பு மலர் வெளியீட்டுடன் கொண்டாடப்பட்டது.



VA State Park க்கு கொடுக்கப்பட்ட முன் பணம் நீங்கலாக, முந்தைய குழுவினர் ஒப்படைத்த தொகைகள் (சங்கம் மற்றும் பள்ளி கணக்குகளில்), சற்றே கூடுதலாக வரும் குழுவினரிடம் ஒப்படைக்கப்படுகிறது.

அதே நேரத்தில் நமது தமிழ்ப்பள்ளியும், தன்னார்வ ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடன், பெரிய வளர்ச்சியை எட்டியுள்ளது. முதல் முறையாக எட்டாம் நிலை வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு, அந்நிலையில் தேர்வாகி மாணவர்கள் பட்டம் பெறுவதை பார்த்தது நம் அனைவருக்கும் ஒரு பெருமையான தருணம். பல அடுக்கு முயற்சிகளின் கனியாக, WASC அமைப்பின் அங்கீகாரத்தை பெற்றது. மாணவர்களின் எண்ணிக்கை ~195 ஆக வளர்ச்சியடைந்துள்ளது. இடப்பற்றாக்குறையின் காரணமாக, தமிழ்ப் பள்ளி புதிய இடத்திற்கு மாற்றப்பட்டது.

தமிழ் பள்ளியின் நிதியிலிருந்து, தமிழ் பள்ளிக்கும், சங்கத்திற்கும் தேவையான, ஒலி பெருக்கிச் சாதனங்கள் வாங்கப்பட்டன. பள்ளியின் செயல்பாட்டு செலவுகளுக்கு தேவையான நிதியை ஒதுக்கி வைத்தபின் இருந்த $40,000 வைப்பு நிதியாக சேமிக்கப்பட்டது.

அனைத்து நிகழ்ச்சிகளிலும் திட்டமிடும் எண்ணிக்கையை விட அதிகமான எண்ணிக்கையில் கலந்துகொண்டு நீங்கள் சிறப்பித்தது தான் எங்கள் மகிழ்ச்சி மற்றும் பெருமை. உங்களுடைய வரவேற்புக்கும், ஒத்துழைப்புக்கும் மற்றும் ஆதரவுக்கும் மிக்க நன்றி.

திரு. ஜெயகாந்தன் அவர்களின் தலைமையிலான, 2025-2026 ஆண்டுகளுக்கான புதிய நிர்வாகக் குழுவினை வாழ்த்தி வரவேற்கிறோம். நமது சங்கத்தின் தரத்தை அவர்கள் அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்வார்கள் என்பதில் எங்களுக்கு ஐயமில்லை.

வாழிய தமிழ் ! வளர்க தமிழர் ஒற்றுமை !

அன்புடன்,
2023-2024 நிர்வாகக் குழு




# செயலாளர் உரை

**நான் RTS குழுவின் செயலராக இரண்டாண்டுகள் பணியாற்றியதை நினைத்துப் பார்க்கும்போது**, என் மனம் மகிழ்ச்சியால், நன்றி உணர்வால், மற்றும் பல இனிமையான நினைவுகளால் நிரம்பியுள்ளது.* என் அதிகாரப்பூர்வ கடமைகள், கூட்டத்தின் (Meetings) குறிப்புகள் எழுதுதல், திட்டங்களை கண்காணித்தல் மற்றும் நிகழ்வுகளை ஒருங்கிணைத்தல் ஆகியவையாக இருந்தாலும், நான் இந்த வேலையில் புதுமையை கொண்டுவர விரும்பினேன்.

**நான் மிகவும் மகிழ்ந்த தருணங்களில் ஒன்றாக இருந்தது** எங்கள் பதவியின் தொடக்கத்தை ஒரு அறிமுக வீடியோவுடன் தொடங்கியது.

**பிரியா, நவீன், இளமாறன், ஆர்த்தி மற்றும் சத்தியாவிற்கு மிகப்பெரிய நன்றி (RTS 25)!** உங்கள் உதவியால் எங்கள் வீடியோ மற்றும் பாடல்கள் சிறப்பாக உருவாக்கப்பட்டன. RTS 25 என்பது ஒரு முக்கிய மைல் கல் மற்றும் அதை "wow" நிகழ்வாக மாற்றியதற்கு நாங்கள் அனைவரும் பெருமை அடைந்தோம்.

**மாணவர்கள் தன்னார்வத் தொண்டில் ஈடுபட்டதை மிகவும் விரும்பினேன்.** அவர்களின் ஆர்வம், திறன்கள் மற்றும் யோசனைகள் உயிர்த்தெழுவதைக் காண்பது வார்த்தைகளில் விவரிக்க முடியாத மகிழ்ச்சி. எங்கள் பண்பாட்டுடன் அவர்களை இணைத்து, குழுவாக வளரும்படி பார்த்தது மன நிறைவாக இருந்தது.

நிகழ்வுகளின் கருப்பொருள்களாக இருந்த **Fiesta , Luau மற்றும் Masquerade Ball** ஆகியவற்றில் மட்டுமல்லாமல் நிதி திரட்டும் நிகழ்ச்சிகளிலும் ஒவ்வொரு தருணமும் அர்த்தமிக்கதாய் அமைய முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டேன்.


**மறக்க முடியாத நினைவுகளில் ஒன்றாக** எங்கள் குழுவின் கடைசி நிகழ்ச்சியில், பார்வையாளர்களின் கைத்தட்டல் எங்கள் அனைவரையும் ஒரே நேரத்தில் பெருமிதத்துடனும் நிறைவேற்றத்துடனும் உணரச்செய்தது.



இந்த இரண்டு ஆண்டுகள் என் வளர்ச்சியின் பயணமாக இருந்தது. நான் மதிப்பிற்குரிய த திறன்களை கற்றுக்கொண்டேன், அருமையான நண்பர்களை உருவாக்கினேன், மற்றும் எண் மகிழ்வான தருணங்களைப் பகிர்ந்துகொண்டேன். இது எங்கள் குழுவின் அற்புதமான உழைப் சாத்தியமாக இருந்திருக்காது - ஒவ்வொரு நிகழ்வுக்கும் வெற்றிக்கும் பின்னணியில் உண்மை சக்தி அவர்கள்.

“A Big Shout-Out to Our Incredible Team:

- **President**: A strong and empathetic leader who inspired us with grace and vision.
- **Treasurers :**Our financial whiz, who was our checkpoint, and kept us on track.
- **Tamil Directors:** Remarkable achievers , getting the school accredited added feather to their ca
- **Membership Directors:** All rounder, building a strong sense of community, and brought more to strength.
- **Communication Director:** The true wordsmith who crafted messages that resonated and inspire
- **Sports Directors:** Ground-roarers who made every event an unforgettable experience.
- **Community Service Directors:** The banquet orchestrators who transformed service into celebra always providing a grand feast for the members.
- **Newsletter Director:** An innovative world who presents information in a sophisticated and refin manner.
- **Cultural Directors:** Made a collective effort to make it a gala event, that engaged all to bring the



இந்த அர்ப்பணிப்புமிக்க மற்றும் ஊக்கமான குழுவுடன் வேலை செய்யும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது மிகப்பெரும் அதிர்ஷ்டமாகும்.

RTS ஐ பிரதிநிதித்துவப்படுத்தும் மற்ற சங்கத்தின் நிகழ்வில் கலந்து கொண்டது மகிழ்ச்சி .ஒரு விதத்தில், இது நமது கலாச்சார இருப்பை நீட்டிக்கவும், பரந்த சமூகத்துடன் இணைக்கவும் அனுமதித்தது.

**என் கணவர் பாபுவுக்கு ஒரு சிறப்பு நன்றி**, அவர் இப்போது மிகவும் சந்தோஷமாக உள்ளார், ஏனெனில் நான் என் வழக்கமான வாழ்க்கை முறைக்குத் திரும்ப முடிகிறது! எனது குடும்பத்தாருக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்; அவர்கள் எனக்கு தொடர்ச்சியான ஆதரவளித்தார்கள், இது எனக்கு இந்த வேலையை முழுமையாக செய்ய உதவியது.

**நன்றி, செயலராக என்னை நம்பியதற்காக**! புதிய குழுவிற்கு உற்சாகமாக cheering செய்யவும், RTS சமூகத்தின் அற்புதமான எதிர்காலத்தை பார்க்கவும் நான் ஆவலாக உள்ளேன்!

**“ஒற்றுமையைக் கொண்டாடுவோம்”**
அன்புடன்
**சுபாஷிணி அருணாச்சலா**

# 2023-2024 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் மாற்றங்கள்



இரிச்மண்ட் தமிழ்ச்சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் மாலை வணக்கம். நான் **சந்தானகுமார் மோகனசுந்தரம்/நித்யா ராஜேந்திரன் (உதவி) பொருளாளர்**.

2023-2024 ஆம் ஆண்டு தலைவர் மார்ஸலின் தலைமையிலான நிர்வாகக்குழு பொறுப்பேற்று தமிழ்ச்சங்கத்தின் நிதியை கையாள்வதில் ஒரு சில மாற்றங்களை செய்துள்ளது. அவற்றை உங்களுக்காக பட்டியலிடுகிறேன்.

கடந்த காலங்களில் பொருளாளருக்கு மட்டுமே வழங்கப்பட்டிருந்த வங்கி இணையவழி சேவையானது தற்போது உதவி பொருளாளர், தலைவர் மற்றும் தமிழ் பள்ளி இயக்குனர் ஆகியோருக்கு முறையே தமிழ்ச்சங்கம் மற்றும் தமிழ்ப்பள்ளியின் வங்கி இணைய வழிச்சேவை வழங்கப்பட்டு கணக்கு விவரங்களை அவர்களும் சரி பார்க்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நம்முடைய தமிழ்ச்சங்கம் VA State Corporation Commissionஇல் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். கடந்த காலங்களில் அதன் நிலை Pending and Inactive என்று இருந்தது. இந்த நிலை மாறி தற்போது Active and in good standing என்ற நிலையில் உள்ளது.



நமது சங்கத்தின் நிதிநிலை அறிக்கை IRSஇல் தாக்கல் செய்யப்படாமல் இருந்த நிலை மாறி அவை முறையே தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பெரும்பாலான பரிவர்த்தனைகளுக்கு தகுந்த ரசீது பெறப்பட்டுள்ளன, பண பரிவர்த்தனைகள் முற்றிலும் நிறுத்தப்பட்டு இணையவழி பரிவர்த்தனைகளை ஊக்குவிக்கப்படுகின்றன மற்றும் சீரான இடைவெளியில் கணக்குகள் நிர்வாகக் குழுவினர்  மற்றும் ஆலோசனை குழுவினரால் சரி பார்க்கப்படுகின்றன.

கடந்த காலங்களில் ஆண்டு முடிவில் நிதிநிலை அறிக்கை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது என்ற நிலைப்பாட்டை மாற்றி தற்போது அரையாண்டு நிதிநிலை அறிக்கை உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது.

Paypal பரிவர்த்தனை இடைத்தரகு கட்டணத்திற்கு உட்பட்டது. இந்த கட்டணத்தை தவிர்க்கும் பொருட்டு தற்போது தமிழ்ச்சங்கம் மற்றும் தமிழ்ப்பள்ளியின் மின்னஞ்சல் முகவரிகளை கொண்டு  Zelle முறை பரிவர்த்தனை நடைபெறுகிறது.

தமிழ்ப்பள்ளியின் வாங்கிக்கணக்கிலிருந்த உபரி நிதியில் நாற்பதாயிரம் டாலர்களை வங்கி வைப்பு நிதி திட்டத்தின் மூலம் சேமிக்கப்பட்டு அதிலிருந்து பெறப்படும் வட்டியை பள்ளி மாணவர்களின் நலத்திட்ட பணிகளுக்கு செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ஐந்தாயிரம் டாலர்களை அவசரகால நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய அனைத்தும் பின்வரும் காலங்களில் தொடர்ந்து பின்பற்ற புதிய நிர்வாக குழுவுக்கு பரிந்துரை செய்யப்படும்.

நமது சங்கத்தின் சிறந்த செயல்பாட்டுக்காக 32 உபயதாரர்கள் பணமாகவும், 7 உபயதாரர்கள் பொருட்கள் அல்லது சேவையாகவும் அவர்தம் பேராதரவை எங்களுக்கு வழங்கியுள்ளனர். மேலும் 392 குடும்ப உறுப்பினர்கள் மற்றும் 32 தனிநபர் உறுப்பினர்களின் பேராதரவையும் நாங்கள் பெற்றுள்ளோம். அவர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளை எங்கள் நிர்வாகக் குழுவின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் நிர்வாகக் குழுவின் அயராத உழைப்பால் இந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்ச்சங்கத்தின் வாயிலாக:
வாழை இலை விருந்து 2 முறையும்
உள்ளரங்க விளையாட்டு நிகழ்ச்சி 1 முறையும்
மகளிர் கேளிக்கை இரவு 2 முறையும்
சிறுவர் கலை நிகழ்ச்சி 2 முறையும்
25ஆம் ஆண்டு வெள்ளி விழா மற்றும் சூப்பர் சிங்கர்ஸ் இன்னிசை நிகழ்ச்சி 1 முறையும்
கோடைக்கால முகாம் 2 முறையும்
சிறுவர் டென்னிஸ் பயிற்சி 1 முறையும்
சுதந்திர தின ஓவியப்போட்டி 1 முறையும்
மட்டைப்பந்து போட்டிகள் 1 முறையும்
ஆடவர் மற்றும் மகளிர் கைப்பந்து போட்டிகள் 2 முறையும்
பெரியவர் கலை நிகழ்ச்சி 2 முறையும்
ஆடவர் கேளிக்கை இரவு 2 முறையும்
CPR மற்றும் முதலுதவி பயிற்சி முகாம் 2 முறையும்
உயர்நிலைப் பள்ளி மற்றும் கல்லூரி ஆயத்தமாதல் முகாம் 2 முறையும்
கணிதவியல் (MathBee) போட்டி 1 முறையும்
குளிராடை வழங்கும் முகாம் 1 முறையும்
தமிழ்நாடு வெள்ள நிவாரண நிதி திரட்டல் 1 முறையும்
சிறுவர்கள் பள்ளி உபகரணங்கள் வழங்கல் முகாம் 1 முறையும்
பெண் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் நங்கை நிகழ்ச்சி 2 முறையும்

தமிழ்ப்பள்ளியின் வாயிலாக:
குழந்தைகளுக்கான போட்டிகள் 2 முறையும்
குழந்தைகள் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் 2 முறையும்
பள்ளி ஆண்டு விழா 2 முறையும்
குழந்தைகள் இன்பச்சுற்றுலா 1 முறையும்

ஆக மொத்தம் 36 பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு உள்ளது என்பதை உங்களின் அரங்கம் நிறைந்த கரகோஷங்கள் மூலம் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். சற்றே கணக்கிட்டு பார்த்தால் இரண்டு மாதங்களுக்கு மூன்று நிகழ்ச்சிகள் என்ற அளவில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு உள்ளது என்ற ஆச்சரியம் நமக்கு புலப்படுகிறது.
இது 2023-2024 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் மாற்றங்கள், நான் சந்தானகுமார் மோகனசுந்தரம்/நித்யா ராஜேந்திரன் (உதவி) பொருளாளர், இரிச்மண்ட் தமிழ் சங்கம்.

வாய்ப்பளித்தமைக்கு நன்றி!! வணக்கம்!!!





# அருமையோ அருமை!


கதம்பம் இரிச்மண்ட் தமிழ் சங்க அமைப்பில் ஒரு சின்னமாக மாறியது. கட்டுரையாளர் சிவசக்தி அறிவுகண்ணனின் முயற்சியை நான் பாராட்டுகிறேன். உங்கள் கதம்பம் இதழின் வரையறைகள் மற்றும் பாணியின் அடிப்படையில் மிகச்சிறந்தது. “கதம்பம்” எனும் தலைப்புக்கு ஏற்ப பல்வேறு அம்சங்களை இணைத்துள்ளது. இது வாசகர்களுக்கு ஆழமான அனுபவத்தை அளிக்கிறது. சொற்கள் சரளமாக இருக்கின்றன. கதம்பம் இதழை வண்ணமயமான படங்களுடன் எடிட்டிங் செய்வதில் சிவசக்தி திறமைசாலி. உங்கள் திறமை நிரம்பிய உழைப்புக்கு மனமார்ந்த நன்றி மற்றும் பாராட்டுகள்!

தொடர்ந்து கதம்ப இதழை எழுத வாழ்த்துகள் !

கதம்பம் இதழின் எழுத்தாளர்களையும் நான் பாராட்டுகிறேன். ஒரு நல்ல எழுத்தாளர் வாசகர்களை புதிய உலகங்களில் அழைத்துச் செல்லக்கூடியவர். ஒவ்வொரு பக்கமும் வாசகர்களுக்கு அனுபவங்களின் பயணமாக மாறுகிறது. நமது வாழ்க்கையில், ஒரு எழுத்தாளரின் பங்களிப்பும் அவர்களின் தன்னலமற்ற சேவையும் நமக்கு நன்றி சொல்ல வேண்டிய காரணமாக அமைகின்றன. ஒவ்வொரு எழுத்தாளரும் தங்கள் படைப்பின் மூலம் “கதம்ப இதழை” மேலும் அழகாக மாற்றுகிறார்கள்!

வாழ்த்துகள் எல்லா எழுத்தாளர்களுக்கும்! உங்கள் எழுத்துகள் என்றும் மிளிரட்டும். ✍️

நன்றி
**மேகலா இளமாறன்**



# 2025-2026 காலத்தின் நிர்வாகக் குழு



இரிச்மண்டு தமிழ்ச்சங்க சகோதர, சகோதரிகளுக்கு வணக்கம்,

நமது இரிச்மண்டு தமிழ்ச் சங்கத்தை வரும் 2025-2026 ஆண்டுகளில் வழி நடத்த புதிய நிர்வாகக் குழு தேர்வு செய்யப்பட்டிருக்கிறது.

தாய் தமிழுக்கும், இரிச்மண்டு தமிழர்களுக்கும் தொண்டாற்ற முன்வந்திருக்கும் புதிய நிர்வாகக் குழு நண்பர்களை இரிச்மண்டு தமிழ்ச் சங்கம் வாழ்த்தி வரவேற்கிறது. 💐

இக்குழுவை அமைத்துக் கொடுத்த தேர்வுக்குழுவிற்கு நெஞ்சார்ந்த நன்றிகள். 🙏

வரும் புத்தாண்டு முதல் புதிய குழு கீழ் வருமாறு பொறுப்புகளை ஏற்கிறது.


# 2025-2026 நிர்வாகக் குழு

| | |
|---|---|
| தலைவர் | ஜெயகாந்தன் நாரயணசுவாமி |
| செயலாளர் | சுகதேவ் வேலாயுதம் |
| பொருளாளர் | ரூபா உமாபதி |
| உதவி பொருளாளர் | அனிதா கார்த்திகேயன் |
| தமிழ்ப் பள்ளி இயக்குனர் | அசோக் பழனிசாமி |
| உதவி தமிழ்ப்பள்ளி இயக்குனர் | அன்னா சகுந்தர் |
| செய்தி தொடர்பு இயக்குனர் | சரவணன் பாலசுப்ரமணியம் |
| செய்தி தொடர்பு இயக்குனர் | ஸ்ரீநாத் தனராஜ் |
| பண்பாட்டு இயக்குனர் | புவனேஸ்வரி கோவிந்தஸ்வாமி |
| பண்பாட்டு இயக்குனர் | ஸ்ரீனிவாஷினி முருகானந்தம் |
| சமூகப் பணிகள் இயக்குனர் | கோபாலகிருஷ்ணன் வெங்கடாச்சலம் |
| சமூகப் பணிகள் இயக்குனர் | பத்மநாபன் மண்ணாங்கட்டி |
| உறுப்பினர் மேலாண்மை இயக்குனர் | டிமோ செல்வராஜ் |
| உறுப்பினர் மேலாண்மை இயக்குனர் | சுரேஷ் ராமராஜ் |
| விளையாட்டு & இளைஞர் பிரிவு இயக்குனர் | அம்மையன் ராமன் |
| விளையாட்டு & இளைஞர் பிரிவு இயக்குனர் | கிருபாநிதி ராமசந்திரன் |
| செய்திமடல் இயக்குனர் | சிவசக்தி அறிவுக்கண்ணன் |

# 25-ஆம் ஆண்டு வெள்ளி விழா இலவச மலர்

லேட் ஆனாலும் லேட்டஸ்ட் ஆக பொலிவுடன் இரிச்மண்டு தமிழ்ச்சங்கத்தின் 25ஆம் ஆண்டு விழா மலர் முப்பெரும் விழா மற்றும் பல்வேறு நிகழ்வுகளில் உறுப்பினர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது





# முதலுதவி, CPR மற்றும் AED பயிற்சி

RTS மற்றும் CSRE இணைந்து RTS உறுப்பினர்களுக்கென சிறப்பாக முதலுதவி, CPR மற்றும் AED பயிற்சி வழங்கப்பட்டது.
இப்பயிற்சி 13 மற்றும் அதற்கு மேல் உள்ள உறுப்பினர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 2 பேர் வரை அனுமதி என சனிக்கிழமை, டிசம்பர் 7, 2024 அன்று 2:30 மணி முதல் - மாலை 5:00 மணி வரை டக்கஹோ நூலகத்தில் நடைபெற்றது.
உயிர் காக்கும் இப்பயிற்சியை உறுப்பினர்களுக்கு பயன்பெறும் வகையில் நடத்திய RTS மற்றும் CSRE அமைப்புகளுக்கு நன்றி மற்றும் பாராட்டுகள்.



இரிச்மண்டு
தமிழ்ச்சங்கம்




# First aid, CPR, & AED Event

CSRE gives the training (www.csrerva.com)

Training includes

- Training on using an EpiPen
- Relief of choking
- Sling application for broken bones
- Bleeding control of wounds

To register use this QR code

**இலவச பயிற்சி!**

RTS is partnering with CSRE to provide a training on First Aid, CPR, and AED session for the first time. These are essential life-saving skills, and such training can make a significant difference in emergencies. Offering these sessions can benefit the community and help people be better prepared to respond to emergencies.

**Certificates will not be provided.**

## Details

- **Age**: 13 and above (Limited seats; up to 2 per family)
- **Date**: Dec 07, Saturday from 2:30Pm to 5:00Pm
- **Venue**: Tuckahoe Library
- **Address**: 1901 Starling Drive, Henrico, VA 23229
- Registration is open until spots are filled.

Sponsored by
**Commonwealth Insurance Agency**



# 2024
# சாதனை நிகழ்வுகள்

இரிச்மண்டு தமிழ்ச்சங்க சகோதர சகோதரிகளே,

லீப் வருடமாக தொடங்கிய 2024, நான்கு கால் பாய்ச்சலில் பயணித்து இன்னும் ஒரு வாரத்தில் நிறைவு பெற இருக்கிறது.

இரண்டு ஆண்டுகளாக அன்புடனும், சேவை நோக்கத்துடனும் பணியாற்றிய இந்த குழு தனது பணிக்காலத்தை விரைவில் நிறைவு செய்யவிருக்கிறது.

2024 கண்ட சாதனை நிகழ்வுகள் உங்கள் பார்வைக்கு...

**கிளிக் செய்யவும்**

நன்றியுடன்,
இரிச்மண்டு தமிழ்ச்சங்கம் நிர்வாக குழு




# தமிழ்ப்பள்ளி

## நிலை 1 - பருப்பு மற்றும் தினைகள்/சமையலறை பொருட்களிலிருந்து ஓவியம் வரைக








வேதா
நிலை-1



பட்டாசுகள்
அவ்யுக்த
நிலை-1



பறவைகள்
ஆக்ரிதி
நவீன்
நிலை:1
கிளி
ஆந்தை
புறா
வாத்து
காகம்
மயில்
குருவி
பெண்குயின்



நிலை -1



ரியான்ஷ்
நிலை -1


சமைரா
நிலை -1


இனிப்பு மற்றும் சிற்றுண்டி
லட்டு
முறுக்கு
கவின்
நிலை -1


வர்ஷா அரவிந்த்
குடை பந்து
Basketball
கால் பந்து
Soccer ball
அடி பந்து
Baseball
டென்னிஸ் பந்து
Tennis ball
ரக்பி பந்து
Rugby or American football


ஸ்ரீ ராம்
நிலை -1



என் வீடு
மகிதா
நிலை -1

# ஒரு இந்தியனின் பார்வையில்

# அமெரிக்கா

வாஷிங்டன் டல்லஸ் விமான நிலையத்தில் வந்து இறங்கியதற்குப் பின்னால், விமான நிலையத்தில் உள்ள நடைமுறைகளை எல்லாம் முடித்ததற்குப் பின்னால், உடைமைகளையும் எடுத்துக்கொண்டு வெளியே வந்த போது எங்களை வரவேற்க வந்திருந்த எங்களது மகனோடு வெளியே வந்தோம். அங்கு இருந்த ஒரு காபி(Coffee) கடையில் ஒரு காபி குடித்த போது அதன் விலை 5டாலர்கள் என்று இருந்தது. மனம் கணக்குப்  போட்டது ஒரு டாலருக்கு 84ருபாய் என்றால் ஒரு காபி யின் விலை ருபாய் 420. ஆக இந்தியாவில் ஒரு காபி 15ருபாய் முதல் 30ருபாய் இருக்கும். ஒரு காபி 30ருபாய் என்றால் கூட 5டாலர் விலை என்றால்  ஒரு டாலரில் வாங்கும் மதிப்பு[Power Purchase Parity (PPP)] அடிப்படையில் ஒரு டாலருக்கு 6ருபாய் என்ற மாற்றுமதிப்புத்தானே இருக்க வேண்டும் என்று மனம் அசை போட்டது.

விமான நிலையத்தை விட்டு வெளியே வந்து காரில் இரிச்மண்டு நோக்கி வந்த பொது, சீராக போடப்பட்டிருந்த சாலைகள், இருமருங்கும் உயரமாக வளர்ந்திருந்த மரங்கள் ஏதோ அடர்ந்த காடுகளின் ஊடே பயணிப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியது. 125 மைல்கள் நீண்ட பயணத்தில் எங்கும் இடையில் நகரங்கள் அல்லது கிராமங்களே இல்லையோ என்ற எண்ணத்தை தோற்றுவித்தது. மனம், இந்தியாவிற்குத் தாவியது. குறிப்பாக குமரி மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலைகளில் பயணம் செய்யும் போது கூட நெடுஞ்சாலைகளை ஒட்டி தொடர்ச்சியாக வீடுகள், கடைகள், கட்டிடங்கள் இருப்பதை பார்க்க முடியும். ஒரு கிராமத்தின் எல்லை எங்கே முடிகிறது, அடுத்த கிராமத்தின் எல்லை எங்கே ஆரம்பிக்கிறது என்பது கூட தெரியாத அளவிற்கு தொடர்ச்சியாக கட்டிடங்களைக் காணும் போது, ஒரு துடிப்பு மிக்க வாழ்க்கை முறையில் இந்தியா வாழ்கிறதோ என்ற எண்ணம் தோன்றுவது இயல்பே. சிறுவயதில் படித்த வரலாறு மனக்கண்ணில் விரிகிறது. கடை ஏழு வள்ளல்களில் ஒருவரான அதியமானை பார்க்க ஔவையார் வந்த போது, அதியமானின் ஆயுதக்கிடங்குகளைப் பார்வை இடுகிறார். அதன்பின் அதியமானின் பகை மன்னனான நெடுங்கிள்ளி என்பவனை பார்க்க செல்கிறார். அவரும் தனது ஆயுதக்கிடங்கை சுற்றிக்காட்டுகிறார். அப்போது ஔவையார் அவரிடம் உனது ஆயுதக்கிடங்கில் உள்ள ஆயுதங்கள் பயன்படுத்தப்படாமல், பளபளப்பாக, மெருகு குன்றாமல் உள்ளது. ஆனால் அதியமானின் ஆயுதக் கிடங்கில் உள்ள ஆயுதங்கள் பலமுறை போரில் பயன்படுத்தப்பட்டு முனைகள் உடைந்து, கொல்லன் பட்டறையில் சரிசெய்யப் படுவதற்காக இருக்கின்றன என்று சொன்ன கதை நியாபகம் வருகிறது.



கிட்டத்தட்ட இந்தியாவின் நிலப்பரப்பை போல 5 மடங்கு அதிகம் உள்ள அமெரிக்காவில், மக்கள் தொகை என்பது இந்தியாவை விட 4ல் ஒருபங்குக்கும் குறைவான அளவில் உள்ளது என்பது  தான் உண்மை. எனவே தான் மிகக்குறைந்த மக்கள் தொகை கொண்ட நாடாக விளங்குவதால் மக்கள் தொகை நெருக்கம் இல்லாத நாடாக விளங்குகிறது. வீட்டை விட்டு தெருவில் இறங்கினால் ஆயிரக்கணக்கான மக்களை சந்திக்கும் ஒரு நாட்டிற்கும், தெருவில் ஆட்கள் நடமாட்டமே இல்லாத ஒரு நாட்டையும் பார்க்கின்ற போது ஏதோ ஒருவிதமான கலையிழந்த நாடாகத் தோன்றுவது இயல்புதானே!

இங்குள்ள தமிழர் குடும்பங்களின் வீடுகளில் நடத்தப்படுகின்ற விழாக்கள் ஒரு வித்தியாசமான நடைமுறையாக இருப்பதை பார்க்கிறோம். ஒரு வீட்டில் விழா நடந்தாலும் அது பிறந்த நாள் கொண்டாட்டமாக இருந்தாலும், மதம் சம்மந்தப்பட்ட விழாவாக இருந்தாலும், ஒவ்வொருவர் வீட்டிலிருந்தும் ஏதேனும் உணவு கொண்டு வந்து கூடி கொண்டாடுவது, அது அவர்களுக்குள் ஏற்படுத்தும் நெருக்கம் என்பது மேலே குறிப்பிட்ட தனிமையை அல்லது கலகலப்பற்ற வாழ்க்கை முறையில் ஒரு அர்த்தத்தை ஏற்படுத்துவதாக அமையுமோ?

அமெரிக்காவிற்கு வந்திருக்கிறோம் என்று சொன்னவுடன், பலரும் கேட்கும் கேள்வி அங்கு நேரம் போவது கடினமாக இருக்கும் என்று பல பெற்றோர்கள் சொல்வதாக கேட்டிருக்கிறோம் என்று கூறுவார்கள். ஆனால் என்னிடம் இருக்கும் புத்தகம் படிக்கும் பழக்கம் என்னை அதில் இருந்து காப்பாற்றியது. நான் படித்த 'அமெரிக்கா வளர்ச்சியின் உயர்வும் தாழ்வும்'(The Rise and Fall of American Growth by  Robert J. Gordon ) என்ற புத்தகம் கடந்த 300 ஆண்டு காலத்தில் தொழில்நுட்ப வளர்ச்சி எந்த அளவிற்கு அமெரிக்க மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களை விவரிக்கின்ற போது தான் அதன் அளப்பரிய விளைவுகளைப் பார்க்க முடிகிறது. ஒரு கடுமையான குளிர் நிலவும் தட்ப வெப்ப நிலை கொண்ட நாட்டில் மத்திய படுத்தப்பட்ட சூடு உண்டாக்கும் அமைப்பு(Heating System), பல இடங்களுக்கு சென்றுவர காரின் தேவை, மின்சாரம் கொண்டுவந்துள்ள பல வசதி வாய்ப்புகள் ஆகியவை இந்தியாவில் தொழில்நுட்ப வளர்ச்சியால் நாம் பெரும் பலன்களை விட மிகப் பரந்தது.

சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கல்லூரியில்(IIT) பணிபுரிந்த ஒரு பேராசிரியரிடம் பேசிக் கொண்டிருந்த போது, அமெரிக்கா 'நாசா' நிறுவனத்தின் கண்டுபிடிப்புகள் என்பது அந்த நாட்டிற்கு மட்டும் சொந்தமானது அல்ல, ஏனெனில் அதில் பணிபுரிபவர்கள் அமெரிக்கர்கள் மட்டுமல்ல, உலகின் மிகச்சிறந்த அறிவாளிகளின் பங்களிப்பு அதில் உள்ளது. எனவே அமெரிக்காவின் விஞ்ஞான, தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் என்பது உலகின் அறிவுஜீவிகளின் ஒட்டுமொத்த கண்டுபிடிப்பு எனக் கூறினார். அவர் சில காலம் 'நாசாவில்' பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. சீனாவின் வளர்ச்சி என்பது சீனர்களின் பங்களிப்பு மட்டுமே என்று சொல்லலாம். தென் கொரியா, ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளின் வளர்ச்சி என்பது அந்தந்த நாடுகளின் மக்களின் பங்களிப்பால் உருவானது என்று குறிப்பிடலாம். ஆனால் அமெரிக்காவின் வளர்ச்சியை பற்றிச் சொல்லுகின்ற போது அப்படி சொல்லமுடியுமா?

அமெரிக்காவின் தற்போதய நிலையை பற்றி குறிப்பாக மக்களின் மனநிலையைப் பற்றி புத்தகங்கள் விவரிக்கின்ற போது அதன் தன்மை எந்தளவிற்கு சிதைந்து கொண்டிருக்கின்றது என்பதைப் பார்க்க முடிகிறது.  இந்திய சாதீய அமைப்பு முறைக்கு பல ஆயிரம் ஆண்டுகால வரலாறு உள்ளது. அது எந்த அளவிற்கு மக்கள் மத்தியில் பிளவினை உருவாக்கியதின் விளைவாக, அதன் வலிமை குன்றியது. அதன் மீது பலர் படையெடுக்கவும், அதன் விளைவாக இந்தியா பிறரிடம் அடிமைப்படுவதற்கும் ஆனா சூழலை ஏற்படுத்தியது.

ஒரு புள்ளிவிவரம் தற்போதைய அமெரிக்காவின் பிளவுண்ட நிலையை எடுத்துக் காட்டுகிறது. 1970களில் எடுக்கப்பட்ட ஆய்வின் படி 10% அமெரிக்கர்களிடம் அதாவது ஜனநாயகக்கட்சி உறுப்பினர்கள் மற்றும் குடியரசுக் கட்சி உறுப்பினர்களிடைய வெறுப்புணர்ச்சி இருந்தது. ஆனால் அதுவே 2020ம் ஆண்டு ஆய்வுகளின் படி 60% மக்களிடம் அப்படிப்பட்ட வெறுப்புணர்ச்சி தலைதூக்கியுள்ளது என்று கூறுகிறார்கள். 60% ஜனநாயகக் கட்சியினர் தனது மகள் அல்லது மகன், குடியரசுக் கட்சியினரின் மகள் அல்லது மகனை காதலிப்பதை விரும்பவில்லை என்று கூறியுள்ளனர்.

அமெரிக்கா மக்களின் வாழ்வில் 'நன்றி நவிலல்'(Thanksgiving ) என்ற விழா சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. அதைப்பற்றி ஒரு பெற்றோர் 'ஒரு Youtube' விவாதத்தில் குறிப்பிடும் போது தான் 'டிரம்ப்'அவர்களுக்கு வாக்களித்த காரணத்தால் தனது மகள்கள் 'நன்றி நவிலல்' விழாவிற்கு தனது வீட்டிற்கு வரமுடியாது என்று கூறி விட்டார்கள் என்று கூறியுள்ளார். இது ஒரு பானை சோற்றிக்கு ஒரு சோறு பதம் என்பது போல் குடும்ப விழாவில் மிகப்பெரிய இடைவெளிகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

ஒரு நாட்டின் மக்கள் தொகை எண்ணிக்கை அதே அளவில் பராமரிக்கப்பட வேண்டும் என்று கொள்ளலாம்.  அதன் பெண்கள் குழந்தை பெரும் விகிதம்(Fertility rate) 2.1% என்ற அளவில் இருக்க வேண்டும் என்று புள்ளி விவர ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அதற்கு குறைவான அளவில் பெண்கள் குழந்தைப்பெறும் விகிதம் இருக்குமானால், அதன் மக்கள் தொகை குறைவதில் கொண்டு முடியும். தற்போது பெண்கள் குழந்தை பெறும் விகிதம் குறைவாக இருக்கின்ற தென்கொரியா, ஜப்பான், இரஷ்யா, ஜெர்மனி போன்ற நாடுகள் இப்படிப்பட்ட சூழ்நிலையை எதிர்நோக்கி இருப்பதை பார்க்கிறோம். இரஷ்யா போன்ற நாடுகள் மக்கள் தொகை பெருக்கத்திற்க்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

அமெரிக்காவின் பெரும்பான்மையாக உள்ள வெள்ளை இனத்தவர்களின் பெண்கள் குழந்தை பெரும் விகிதம் 1.6% ஆகா உள்ளது. அதாவது தென்கொரியா, ஜப்பான், இரஷ்யா போன்ற நாடுகளில் ஏற்பட்டுள்ள மக்கள் தொகை குறைவு, அமெரிக்காவில் ஏற்படாமல் இருப்பதற்கு காரணம், இங்கு அதிக எண்ணிக்கையில் வரும் புலம் பெயர் தொழிலாளர்கள் தான். லத்தீன் அமெரிக்கா, ஆசியா போன்ற நாடுகளிலிருந்து வந்துள்ள புலம்பெயர் தொழிலாளர்கள், விஞ்ஞான தொழில்நுட்பத் துறைகளில் மட்டுமல்ல, சாதாரண தொழில்கள், விவசாயம் போன்றவற்றில் தங்களது பங்களிப்பை செலுத்துவதன் மூலம் அமெரிக்கப் பொருளாதாரம் சரிவை நோக்கி செல்வதை தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கிறது என்று கூடச் சொல்லலாம். அமெரிக்காவின் சுதந்திர மனப்பான்மை என்பது 'சோம்பேறித்தனத்தோடு'(Laissez faire) தொடர்புடையது என்று சொல்கிறார்கள். எனவே 'தாராளவாத' பொருளாதார அறிஞர்கள் ஓரளவிற்கான அரசு கட்டுப்பாடு வேண்டும் என்று கூறுகின்றனர். எனவே புலம் பெயர் தொழிலாளர்கள் மீதான கட்டுப்பாடும், சுதந்திர மனப்பான்மையும் அமெரிக்கா எதிர்காலத்திற்கு என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை காலம் தான் சொல்லும்!

-பேராசிரியர் சுந்தரம் (ஓய்வு)
அண்ணாமலை பல்கலைக்கழகம்.

# குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான கலை நிகழ்ச்சி




Rich
Melodies


Run Wildcats




RTS

# நன்கொடை




உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் ஆவர்.

இரிச்மண்டின் பசிப்பிணி தீர்க்க வந்த ஒரு அருமையான வாய்ப்பு. முப்பெரும் விழாவில் மதியம் 1:30 முதல் 4:30 மணி வரை, FeedMore நிறுவனத்திற்கென நன்கொடைகள் பெறப்பட்டது. நீங்கள் அளித்த ஒவ்வொரு துளியும் ஒரு பசித்த மனிதனுக்கு விருந்தாகும்.

நன்றி!



2024

**2023-2024 காலத்தின் நிர்வாகக் குழு**


2023-2024 ஆம் ஆண்டு நமது தமிழ் சமூகத்திற்கு சேவை புரிய எங்களுக்கு வாய்பளித்தமைக்கு நன்றி. நிறை குறைகள் நிறைந்தது தான் வாழ்க்கை. நிறைகள் இருப்பின் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். குறைகள் இருப்பின், உங்கள் வீடு பிள்ளையாக நினைத்து மன்னித்துவிடுங்கள்.

**நன்றி!**

2023



# PROUD Sponsors



# PROUD Sponsors




⌂



சிவசக்தி அறிவுக்கண்ணன்

# நன்றி உரை

கதம்பம் காலாண்டு இதழில் தங்களின் கதை கட்டுரை, கவிதை மற்றும் பல பயனுள்ள விஷயங்களை இரிச்மண்டு சமூகத்துடன் பகிர்ந்து கொண்ட அனைத்து எழுத்தாளர்களுக்கும் தமிழ்ச்சங்க நிர்வாகக்குழுவின் மனமார்ந்த நன்றிகள்.

செய்திமடலை சரிபார்த்து வெளியிட உதவிய மார்செலின் லூவிஸ்மார்ட்டின், சந்தானகுமார் மோகனசுந்தரம், சுபாஷினி அருணாசல,  ஸ்ரீலதா முத்து, இளமாறன் அன்பழகன் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகள் மற்றும் செய்திமடலுக்கு ஆதரவளித்த RTS குழு உறுப்பினர்கள் மற்றும் அனைவருக்கும் நன்றி.



மார்செலின் லூவிஸ்மார்ட்டின்



சுபாஷினி அருணாசல



சந்தானகுமார் மோகனசுந்தரம்



ஸ்ரீலதா முத்து



இளமாறன் அன்பழகன்

இந்த மாத செய்திமடல் பற்றி கருது தெரிவிக்க கீழே உள்ள இணைப்பை பயன்படுத்தவும்

CLICK HERE

newsletter.rts@richmondtamilsangam.org எனும் மின்னஞ்சலிலும் எங்களை தொடர்பு கொள்ளலாம்.

# website:

www.richmondtamilsangam.com

# contact us:

richmondtamilsangam@gmail.com
newsletter.rts@richmondtamilsangam.org
tamilschool@richmondtamilsangam.org